

# SIVAPURANAM
## MISSION

www.Sivapuranam.in

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# 2. கீர்த்தித் திருஅகவல்

(தில்லையில் அருளியது)

சிவனது திருவருட்புகழ்ச்சி முறைமை

(நிலைமண்டில ஆசிரியப்பா)



# திருச்சிற்றம்பலம்



தில்லை மூதூர் ஆடிய திருவடி

பல்உயிர் எல்லாம் பயின்றனன் ஆகி

எண்ணில் பல்குணம் எழில்பெற விளங்கி

மண்ணும் விண்ணும் வானோர் உலகும்

துன்னிய கல்வி தோற்றியும் அழித்தும்





என்னுடை இருளை ஏறத் துரந்தும்
அடியார் உள்ளத்து அன்பு மீதூரக்
குடியாக் கொண்ட கொள்கையும் சிறப்பும்
மன்னும் மாமலை மகேந்திரம் அதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித்து அருளியும்





கல்லாடத்துக் கலந்து இனிது அருளி

நல்லா ளோடு நயப்புறவு எய்தியும்

பஞ்சப் பள்ளியில் பால்மொழி தன்னொடும்

எஞ்சாது ஈண்டும் இன்அருள் விளைத்தும்

கிராத வேடமொடு கிஞ்சுக வாயவள்





விராவு கொங்கை நல்தடம் படிந்தும்

கேவேடர் ஆகிக் கெளிறது படுத்தும்

மாவேட்டு ஆகிய ஆகமம் வாங்கியும்

மற்றுஅவை தம்மை மகேந்திரத்து இருந்து

உற்ற ஐம்முகங்களால் பணித் தருளியும்





நந்தம் பாடியில் நான்மறை யோனாய்

அந்தம்இல் ஆரியனாய் அமர்ந் தருளியும்

வேறுவேறு உருவும் வேறுவேறு இயற்கையும்

நூறுநூறு ஆயிரம் இயல்பினது ஆகி

ஏறுடை ஈசன் இப்புவனியை உய்யக்





கூறுடை மங்கையும் தானும் வந்தருளிக்

குதிரையைக் கொண்டு குடநாடு அதன்மிசைச்

சதுர்படச் சாத்தாய்த் தான் எழுந்தருளியும்

வேலம் புத்தூர் விட்டேறு அருளிக்

கோலம் பொலிவு காட்டிய கொள்கையும்





தர்ப்பணம் அதனில் சாந்தம் புத்தூர்

வில்பொரு வேடற்கு ஈந்த விளைவும்

மொக்கணி அருளிய முழுத்தழல் மேனி

சொக்கது ஆகக் காட்டிய தொன்மையும்

அரியொடு பிரமற்கு அளவுஅறி ஒண்ணான்





நரியைக் குதிரை ஆக்கிய நன்மையும்

ஆண்டுகொண்டு அருள அழகுறு திருவடி

பாண்டியன் தனக்குப் பரிமா விற்று

ஈண்டு கனகம் இசையப் பெறாஅது

ஆண்டான் எம்கோன் அருள்வழி இருப்பத்





தூண்டு சோதி தோற்றிய தொன்மையும்

அந்தணன் ஆகி ஆண்டுகொண் டருளி

இந்திர ஞாலம் காட்டிய இயல்பும்

மதுரைப் பெருநன் மாநகர் இருந்து

குதிரைச் சேவகன் ஆகிய கொள்கையும்





ஆங்கது தன்னில் அடியவர்க்கு ஆகப்

பாங்காய் மண்சுமந் தருளிய பரிசும்

உத்தர கோச மங்கையுள் இருந்து

வித்தக வேடம் காட்டிய இயல்பும்

பூவணம் அதனில் பொலிந்திருந்து அருளித்





தூவண மேனி காட்டிய தொன்மையும்

வாத வூரினில் வந்துஇனிது அருளிப்

பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்

திருவார்பெருந்துறைச் செல்வன் ஆகிக்

கருவார் சோதியில் கரந்த கள்ளமும்





பூவலம் அதனில் பொலிந்துஇனிது அருளிப்
பாவ நாசம் ஆக்கிய பரிசும்
தண்ணீர்ப் பந்தர் சயம்பெற வைத்து
நன்னீர்ச் சேவகன் ஆகிய நன்மையும்
விருந்தினன் ஆகி வெண்காடு அதனில்

60





குருந்தின் கீழ்அன்று இருந்த கொள்கையும்

பட்ட மங்கையில் பாங்காய் இருந்துஅங்கு

அட்டமா சித்தி அருளிய அதுவும்

வேடுவன் ஆகி வேண்டுஉருக் கொண்டு

காடுஅது தன்னில் கரந்த கள்ளமும்





மெய்க் காட்டிட்டு வேண்டு உருக் கொண்டு
தக்கான் ஒருவன் ஆகிய தன்மையும்
ஓரி ஊரின் உகந்துஇனிது அருளிப்
பார்இரும் பாலகன் ஆகிய பரிசும்
பாண்டூர் தன்னில் ஈண்ட இருந்தும்





தேவூர்த் தென்பால் திகழ்தரு தீவில்

கோவார் கோலம் கொண்ட கொள்கையும்

தேன்அமர் சோலைத் திருவாரூரில்

ஞானம் தன்னை நல்கிய நன்மையும்

இடைமருது அதனில் ஈண்ட இருந்து

75





படிமப் பாதம் வைத்தஅப் பரிசும்

ஏகம் பத்தின் இயல்பாய் இருந்து

பாகம் பெண்ணோடு ஆயின பரிசும்

திருவாஞ் சியத்தில் சீர்பெற இருந்து

மருவார் குழலியொடு மகிழ்ந்த வண்ணமும்





சேவகன் ஆகித் திண்சிலை ஏந்திப்

பாவகம் பலபல காட்டிய பரிசும்

கடம்பூர் தன்னில் இடம்பெற இருந்தும்

ஈங்கோய் மலையில் எழிலது காட்டியும்

ஐயாறு அதனில் சைவன் ஆகியும்

85





துருத்தி தன்னில் அருத்தியோடு இருந்தும்
திருப்பனை யூரில் விருப்பன் ஆகியும்
கழுமலம் அதனிற் காட்சி கொடுத்தும்
கழுக்குன்று அதனில் வழுக்காது இருந்தும்
புறம்பயம் அதனில் அறம்பல அருளியும்





குற்றா லத்துக் குறியாய் இருந்தும்

அந்தமில் பெருமை அழல்உருக் கரந்து

சுந்தர வேடத்து ஒருமுதல் உருவுகொண்டு

இந்திர ஞாலம் போலவந்து அருளி

எவ்வெவர் தன்மையும் தன்வயிற் படுத்துத்





தானே ஆகிய தயாபரன் எம்இறை
சந்திர தீபத்துச் சாத்திரன் ஆகி
அந்தரத்து இழிந்துவந்து அழகுஅமர் பாலையுள்
சுந்தரத் தன்மையொடு துதைந்து இருந்தருளியும்
மந்திர மாமலை மகேந்திர வெற்பன்





அந்தமில் பெருமை அருள்உடை அண்ணல்

எந்தமை ஆண்ட பரிசுஅது பகரின்

ஆற்றல் அதுவுடை அழகமர் திருஉரு

நீற்றுக் கோடி நிமிர்ந்து காட்டியும்

ஊனம் தன்னை ஒருங்குடன் அறுக்கும்

105





ஆனந் தம்மே ஆறா அருளியும்

மாதிற் கூறுடை மாப்பெருங் கருணையன்

நாதப் பெரும்பறை நவின்று கறங்கவும்

அழுக்கு அடையாமல் ஆண்டுகொண்டு அருள்பவன்

கழுக்கடை தன்னைக் கைக்கொண்டு அருளியும்

110





மூலம் ஆகிய மும்மலம் அறுக்கும்

தூய மேனிச் சுடர்விடு சோதி

காதலன் ஆகிக் கழுநீர் மாலை

ஏலுடைத் தாக எழில்பெற அணிந்தும்

அரியொடு பிரமற்கு அளவு அறியாதவன்

115





பரிமா வின்மிசைப் பயின்ற வண்ணமும்
மீண்டு வாரா வழிஅருள் புரிபவன்
பாண்டி நாடே பழம்பதி ஆகவும்
பத்திசெய் அடியரைப் பரம்பரத்து உய்ப்பவன்
உத்தர கோச மங்கைஊர் ஆகவும்

120





ஆதி மூர்த்திகட்கு அருள்புரிந் தருளிய
தேவ தேவன் திருப்பெயர் ஆகவும்
இருள்கடிந் தருளிய இன்ப ஊர்தி
அருளிய பெருமை அருள்மலை ஆகவும்
எப்பெருந் தன்மையும் எவ்வெவர் திறமும்

 

அப்பரிசு அதனால் ஆண்டுகொண் டருளி
நாயி னேனை நலமலி தில்லையுள்
கோல மார்தரு பொதுவினில் வருகஎன
ஏல என்னை ஈங்குஒழித் தருளி
அன்றுஉடன் சென்ற அருள்பெறும் அடியவர்

130





ஒன்ற ஒன்ற உடன்கலந் தருளியும்

எய்த வந்திலாதார் எரியிற் பாயவும்

மால் அதுவாகி மயக்கம் எய்தியும்

பூதலம் அதனில் புரண்டுவீழ்ந்து அலறியும்

கால்விசைத்து ஓடிக் கடல்புக மண்டி





நாத நாத என்று அழுதுஅரற்றிப்
பாதம் எய்தினர் பாதம் எய்தவும்
பதஞ்சலிக்கு அருளிய பரமநாடக என்று
இதஞ்சலிப்பு எய்தநின்று ஏங்கினர் ஏங்கவும்
எழில்பெறும் இமயத்து இயல்புடை அம்பொன்





பொலிதரு புலியூர்ப் பொதுவினில் நடம்நவில்
கனிதரு செவ்வாய் உமையொடு காளிக்கு
அருளிய திருமுகத்து அழகுறு சிறுநகை
இறைவன் ஈண்டிய அடியவ ரோடும்
பொலிதரு புலியூர் புக்குஇனிது அருளினன்
ஒலிதரு கயிலை உயர்கிழ வோனே.

146



ஸ்ரீ மாணிக்கவாசகர்